**<u>வாக்குமூலம்</u>**

**<u>10 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர், சென்னை 08.</u>**

**வழக்கு எண் 762/2025**

**அ.சா. 5**

பெயர் : திரு.அஜித்குமார் வயது :

தந்தை பெயர் : முகவரி :எண் 9 பொன்னப்பன் தெரு, புளியந்தோப்பு

தொழில் :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of August 2025.

Signature of Witness

**Name of the Xerox Operator** : Tr. G. Venu

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of August 2025.

Signature of Xerox Operator

**<u>எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் காபி கம்பெனியில் மார்க்கெட்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், அதில் ஒருவர் எனது மாமாவின் மனைவி ஆவார். மற்ற இருவர்கள் பெயர் ஆதி மற்றும் இமானவேல் ஆகும். அசா–1 எனது பாட்டி ஆவார். சாட்சி மாதவி என் அம்மா ஆவார். 21.11.2023 அன்று மாலை நான் என் பாட்டி வீட்டில் இருந்தேன். என் மனைவி ஐஸ்வர்யா, மாமா மாணிக்கம் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் எங்களிடம் வந்து சண்டை போட்டார்கள், பின்னர் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது, மாணிக்கம், முத்துலட்சுமி, ஐஸ்வர்யா ஆகியோர்கள் மட்டும் வீட்டில் இருந்தார்கள். என் மனைவி எனக்கு போன் செய்து, ஆஜர் எதிரிகள் என் மாமாவை எதிரிகள் மூவரும் வீட்டிற்குள் புகுந்து, கையில் அடித்ததாகவும், அதனால் எனது மாமாவிற்கு தலையில் காயம்பெற்றதாகவும், பாட்டி சண்டையை தடுக்க முற்பட்டபோது அவருக்கு வலது கண்ணுக்கு அருகே காயம் ஏற்பட்டது என்றும் கூறினார். பின்னர் நான் வீட்டிற்கு வந்து என் பாட்டியை ஆட்டோ மூலம் அரசு ராஜிவ் காந்தி மருத்தவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். போலீஸார் மருத்துவமனைக்கு வந்து காயம்பெற்ற என் பாட்டியிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். அதன் பேரில் போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை போலீஸார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனைக்கு நான் தான் கூட்டி சென்றேன். மருத்துவரிடம் எவ்வாறு அடிபட்டது என்ற விபரத்தை என் பாட்டி பதட்டத்துடன் இருந்ததால் நான் தான் சொன்னேன். மருத்துவமனைக்கு அழைத்து சென்ற நேரம் சரியாக ஞாபகமில்லை, 07.00 மணி இருக்கலாம். சண்டை நடந்த பிறகு புகார் கொடுத்து, வழக்கு போட்டார்களா என்றால் போட்டார்கள். யார்

மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்று தெரியவில்லை. எனக்கு சம்பவத்தை குறித்து தெரியாது என்றும், என் பாட்டிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

"திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, சரியென்று ஒப்புக்கொண்ட பின் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

ஒம்/ P. ரேவதி
10 வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர், சென்னை 08.

// உண்மை நகல் //

**வாக்குமூலம்**

**10 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர், சென்னை 08.**

**வழக்கு எண் 762/2025**

**அ.சா. 6**

பெயர் : திருமதி.ஐஸ்வர்யா வயது :

கணவர் பெயர் : முகவரி :எண் 9 பொன்னப்பன் தெரு, புளியந்தோப்பு